2004 பிப்ரவரி 13]

முற்பகல் 10-05

திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 63, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

63—

சூரிய ஒளி மின் சக்தி

***21561—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின் சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூரிய ஒளி மின் சக்தி மூலம் தெரு மின் விளக்குகள் எரிய வைக்க சிறப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்த அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். மத்திய அரசின் மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்தின் நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் சூரிய ஒளி தெரு விளக்கு அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) மத்திய அரசின் மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் 2002-2003 ஆம் ஆண்டில் சூரிய ஒளி மின் விளக்குத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு முதல் கட்டமாக 200 சூரிய ஒளி தெரு விளக்குகள் ஒதுக்கீடு செய்தது. பின்பு கூடுதலாக 200 சூரிய ஒளி தெரு விளக்குகள் ஒதுக்கீடு செய்து ஆக மொத்தம் 400 சூரிய ஒளி தெரு விளக்குகள் அமைப்பதற்கு விளக்கு ஒன்றிற்கு ரூ. 11,000 வீதம் மானியமாக வழங்க

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அனுமதித்துள்ளது. இந்தத் தெரு விளக்குகளை வணிக ரீதியில் அல்லாத உள்ளாட்சி அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பழங்குடியினர் பள்ளிகள் ஆகிய நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்து அங்கீகரிக்கப்பட்ட தயாரிப்பாளர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 64, திரு. சி. இராசேந்திரன், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

64—

துணை மின் நிலையம்

***39031—திரு. சி. இராசேந்திரன்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவோணம் ஒன்றியம், ஊரணிபுரத்தில் உள்ள 33 கி.வா. துணை மின் நிலையத்தை 130 கி.வா. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவோணம் ஒன்றியம், ஊரணிபுரம் 33/11 கி.வா. துணை மின் நிலையத்தினைத் தரம் உயர்த்தும் திட்டம் தற்போது இல்லை என தமிழ்நாடு மின்வாரியம் தெரிவித்துள்ளது.

திரு. சி. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவோணம் ஒன்றியம், ஊரணிபுரத்தில் 33 கி.வா. உள்ள துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்தித்தர வேண்டும் என்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசை வேண்டிக்கொள்கிறேன் அந்தத் துணை மின் நிலையத்தில் 6000 மின் இணைப்புகள் உள்ளன. அதில் 1,500 மின் இணைப்புகள் விவசாயத்திற்காகப் பயன்படுகின்றன; 14 ஊராட்சிகளை உள்ளடக்கியது இந்தத் துணை மின் நிலையம். அதற்குப் பெரும்பாலும் பட்டுக்கோட்டை